**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.459/2024**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பாபநாசம் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | ஆழ்வார்க்குறிச்சி | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 11th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆழ்வார்க்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மகேஸ்வரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 02.04.2023 அன்று போலீசார் சம்பவம் நடந்த இடமான அம்மன்கோவில் முன்பு வந்து விசாரித்தார்கள். படம் வரைந்தார்கள். நான் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சாட்சி இந்திரா என்னுடைய மனைவி என்றால் சரிதான். நானும், இந்த வழக்கின் புகார்தாரர் மகேஸ்வரியும் உறவினர்கள் என்றால் சரியல்ல. பக்கத்து வீட்டுக்காரர். நான் அம்மன்கோவில் அருகே கடை வைத்துள்ளேன். மகேஸ்வரி வீடும், என் வீடும் அம்மன்கோவில் அருகே இல்லை என்றால் 4 வீடுகள் தள்ளி உள்ளது. என்னுடைய வீடு, கடை

ஆகியவற்றை போலீசார் வரைந்தார்களா? என்றால் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைந்தார்கள். சம்பவயிடத்தின் அருகே உள்ள வீடுகளை வரைந்தார்களா? என்றால் இல்லை. அந்த கோவில் வளாகத்தில் ஒரு ஆலமரம் உள்ளது. சம்பவயிடத்தில் 2 ஆலமரங்கள் உள்ளது என்றாலும், நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவயிடத்தில் இரத்தக்கறை பட்டதா? என்றால் பட்டது. அதை போலீசார் பார்வை மகஜரில் குறித்தார்கள் என்றால் சரிதான். இரத்தம் பட்ட மண்ணை போலீசார் எடுத்தார்களா? என்றால் எடுத்தார்கள். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், என் முன்னால் போலீசார் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 என்னுடைய உறவினர் என்பதினால் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:40:31 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.459/2024**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆழ்வார்க்குறிச்சி | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 11th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆழ்வார்க்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். பேச்சிமுத்து, மகேஸ்வரியை வெட்டியது சம்பந்தமாக போலீசார் பேச்சிமுத்துவை அம்மன்கோவில் அருகே வைத்து விசாரித்து கொண்டிருந்தார்கள். பேச்சிமுத்து, மகேஸ்வரியை அவர் வெட்டியதாக போலீசாரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். போலீசார் என்னிடமும், ரமேஷ் என்பவரிடமும் சாட்சியாக இருக்க முடியுமா? என்று கேட்டார்கள். பின்னர், பேச்சிமுத்து செங்காலூர் இரயில்வே பாலம் அருகேயுள்ள புதரிலிருந்து அரிவாள் ஒன்றை எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்தார். நானும், ரமேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அத்தாட்சி **அ.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளை தான் எதிரி அன்றைய

தினம் போலீசாரிடம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த அரிவாள் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் அம்மன்கோவில் அருகே வருவதற்கு முன்பாகவே, போலீசார் எதிரியிடம் விசாரித்து கொண்டிருந்தார்களா? என்றால் விசாரித்து கொண்டிருந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். அவர் பெயர் எனக்கு தெரியாது. போலீசார ஒப்புதல் வாக்குமூலத்தை எதை வைத்து எழுதினார்கள் என்றால் பேனா வைத்து எழுதினார்கள். எத்தனை Copy எழுதினார்கள் என்றாலும், எவ்வளவு கையெழுத்து நான் போட்டேன் என்றாலும் 2 கையெழுத்துக்கள் போட்டேன். அம்மன்கோவில் அருகேயுள்ள வீட்டுக்காரர்கள் அந்த இடத்தில் நின்றார்களா? என்றால் நிறைய நபர்கள் நின்றார்கள்.

நான் கையெழுத்து செய்வதற்கு முன்பாகவே போலீசார் எதிரியை கைது செய்த விபரம் தெரியுமா? என்றால் முதல் நாளே கைது செய்தார்கள் 03.04.2023 அன்று தான் மதியம் 01.30 மணியளவில் நாங்கள் கையெழுத்து செய்தோம். எதிரியை முந்தின நாள் எப்போது போலீசார் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட அன்றைய தினம் இன்ஸ்பெக்டரை பார்த்தேனா? என்றால் இல்லை.(எனக்கு பதவி விபரங்கள் தெரியாது.). நான் 3 ஸ்டார், 2 ஸ்டார் வைத்த அதிகாரிகளை பார்த்தேனா? என்றால் இல்லை.

அம்மன்கோவிலிருந்து, இரயில்வே கேட் ஒன்றரை கி.மீ தூரத்தில் உள்ளது. நானும், ரமேஷீம் பைக்கில் இரயில்வே கேட்டிற்கு சென்றோம். இரயில்வே பாலத்திற்கு எந்தப்பக்கமுள்ள முட்புதரிலிருந்து எதிரி

அரிவாளை போலீசாரிடம் எடுத்து ஆஜர் செய்தார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். அரிவாளின் நீளம், அகலம் எனக்கு தெரியாது என்றால் அது கொம்புப்பிடி போட்ட அரிவாளாகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளில் இரத்தக்கறை இல்லை என்றால் கைப்பற்றப்பட்டபோது இருந்தது. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், சா.பொ.1 எதிரியிடமிருந்து கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 என்னுடைய உறவினர் என்பதினால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.11 17:40:43 +0530